(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 2(19).]

# பாராளுமன்றம்

## 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2024 ஜனவரி 19 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2024 பெப்ரவரி 06, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1317/2023

கௌரவ மொஹமட் முஸம்மில்,— நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கையில் தற்போது இயங்கி வருகின்ற காதி நீதிமன்றங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) காதி நீதிமன்றங்களினால் வழங்கப்பட்ட தீர்ப்புகளுக்கு அமைவாக 2015ஆம் ஆண்டு முதல் இது வரை இடம்பெற்றுள்ள விவாகரத்துகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) காதி நீதிமன்றங்களில் கடமையாற்றும் 60 வயதைத் தாண்டிய காதிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) பட்டம் பெற்றுள்ள காதிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(v) காதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1467/2023

கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள அரசாங்க ஆயுர்வேத மருத்துவமனைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி மருத்துவமனைகளில் மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண சபைகளுக்கும் சொந்தமான மருத்துவமனைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) எதிர்காலத்தில் நிர்மாணிப்பதற்கு திட்டமிட்டுள்ள புதிய ஆயுர்வேத மருத்துவமனைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) அவை நிர்மாணிக்கப்படும் பிரதேசங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1515/2023

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள திரையரங்குகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றில், தற்போது திரைப்படங்கள் திரையிடப்படுகின்ற திரையரங்குகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) 2019 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தால் திரையிடப்பட்டுள்ள திரைப்படங்களின் எண்ணிக்கை ஆண்டுவாரியாக தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) 2019 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை திரைப்படங்களைத் தயாரிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள கடன் தொகை ஆண்டுவாரியாக தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1554/2023

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்குத் தனித்துவமான மூலிகைத் தாவர வகைகள் யாவை என்பதையும்;

(ii) இலங்கை மூலிகைத் தாவரங்களை ஏற்றுமதி செய்கின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி மூலிகைத் தாவர வகைகள் யாவை என்பதையும்;

(iv) அவற்றை ஏற்றுமதி செய்வதன் மூலம் வருடாந்தம் ஈட்டப்படுகின்ற வருமானம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1585/2023

கௌரவ சஞ்சீவ எதிரிமான்ன,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் கறுவா பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படும் பிரதேசங்கள் யாவை;

(ii) கறுவா சார்ந்த உற்பத்திகள் அதிகளவில் மேற்கொள்ளப்படும் பிரதேசங்கள் யாவை;

(iii) கறுவா பயிர்ச்செய்கைக்கு கன்றுகள் மற்றும் பசளை வழங்கப்படும் அடிப்படை யாது;

(iv) 2019 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கறுவா பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள காணிகளின் அளவு யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1626/2023

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1990 ஒக்டோபர் 15 ஆம் திகதி இலங்கை அரசாங்கம் ஏற்படுத்திக் கொண்ட ரம்சார் சமவாயத்திற்கு அமைவாக முத்துராஜவெல ஈரநில வலயத்தைப் பாதுகாப்பதற்காக இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் முத்துராஜவெல ஈரநில வலயத்தில் உள்ள தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் தொடர்பில் தரவு முறைமையொன்று பேணப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) முத்துராஜவெல ஈரநில வலயத்திற்குச் சொந்தமான காணிகளை சட்ட விரோதமான முறையில் நிரப்புவது தொடர்பில் கிடைத்துள்ள முறைப்பாடுகள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்டுள்ள முறையான நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1648/2023

கௌரவ மிலான் ஜயதிலக்க,— துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைத் துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான காணிகளின் விஸ்தீரணம் யாது என்பதையும்;

(ii) அவற்றில் நிர்மாணங்கள் மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்காக தற்போது பயன்படுத்தப்படுகின்ற காணிகளின் விஸ்தீரணம் யாது என்பதையும்;

(iii) மேற்படி காணிகள் குத்தகை அடிப்படையில் தனியாருக்கு வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அக்கம்பெனிகள் / நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(v) காணிகளை குத்தகைக்கு வழங்குவதன் மூலம் அதிகாரசபை ஈட்டுகின்ற வருடாந்த வருமானம் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2402/2023

கௌரவ இஷாக் ரஹுமான்,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிறுநீரக நோயாளிகள் உள்ள குடும்பங்கள் வாழும் வீடுகளை புனரமைப்பதற்காக தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் நிதியுதவி வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) அந்நிதியுதவி எவ்வளவு என்பதையும்;

(iii) அந்நிதியுதவியை பெறுவதற்குத் தேவையான தகைமைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி நிதியுதவியைப் பெறுவதற்காக சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட நிதியுதவியை பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பித்துள்ள நபர்களின் எண்ணிக்கை மற்றும் இன்றளவில் அந்நிதியுதவி வழங்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்ட ரீதியாக தனித்தனியே யாதென்பதையும்;

(ii) தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் அந்நிதியுதவி வழங்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

(iv) வீடு இல்லாத சிறுநீரக நோயாளிகள் உள்ள குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டமொன்றினை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2697/2023

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை மாத்தளை மாவட்டத்தில் க.பொ.த. (உயர் தர) பரீட்சைக்குத் தோற்றியுள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி மாணவர்களின் எண்ணிக்கையானது விஞ்ஞான, கணித, வர்த்தக மற்றும் கலைப் பிரிவுகளுக்கு அமைய சதவீதமாக வெவ்வேறாக யாது;

(iii) மாத்தளை மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களில் பெரும்பாலானவர்களை க.பொ.த. (உயர் தர) விஞ்ஞான அல்லது கணிதப் பிரிவுக்கு ஆற்றுப்படுத்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2883/2023

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2022 ஆம் ஆண்டு இடைக்கால வரவு செலவுத்திட்டத்தின் மூலம் கால்நடை அபிவிருத்தியின் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட நிதி ஒதுக்கீடு எவ்வளவு என்பதையும்;

(ii) அதிலிருந்து பயன்படுத்தப்பட்ட மற்றும் பயன்படுத்தப்படாத நிதி ஒதுக்கீடு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) இலங்கையில் கோழி இறைச்சி உற்பத்தி மற்றும் பால் உற்பத்தி என்பவற்றை மேம்படுத்துவதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2024, பெப்ரவரி 06, செவ்வாய்க்கிழமை)**

3741/2023

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஓய்வூதிய பிரமாணக் குறிப்பின் “ட” அட்டவணைக்கமைய அமைச்சர்களின் பிரத்தியேக பணியாட்டொகுதி செயலாளர்களுக்கும் அமைச்சுகளுக்கான நிரந்தர செயலாளர்களின் ஒருங்கிணைப்புச் செயலாளர்களுக்கும் ஓய்வூதியத்திற்கான உரித்து உள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இன்றளவில் மேற்படி ஓய்வூதியம் பெறுகின்ற மற்றும் அதற்கென விண்ணப்பித்துள்ள எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்ட செயலாளர்களுக்கு விதவைகள்/அநாதைகள் ஓய்வூதிய உரித்து மற்றும் ஓய்வூதிய பணிக்கொடை உரித்து வழங்கப்படுகின்றனவா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இணைய வழியூடாக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு உரிய ஆவணங்களைச் சமர்ப்பிப்பது தொடர்பில் அரச நிறுவனங்களிலுள்ள விடயத்துக்குப் பொறுப்பான எழுதுவினைஞர்களுக்கு பயிற்சி வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) அது தொடர்பிலான அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஓய்வூதியத் திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவரது நேரடித் தொலைபேசி இலக்கம் ஒன்றினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) அமைச்சரொருவரின் பிரத்தியேக பணியாட்டொகுதியில் செயலாளராகவும் பெருந்தோட்ட இரராஜாங்க அமைச்சுச் செயலாளரின் ஒருங்கிணைப்புச் செயலாளராகவும் பணியாற்றிய திரு. சமல் எஸ். பியசுந்தர அவர்களுக்கான ஓய்வூதியம் இதுவரை வழங்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2024 பெப்ரவரி 07, புதன்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1686/2023

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வவுனியா மாவட்டத்தின் வெங்கலச் செட்டிக்குளம் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள விவசாயிகளின் பயிர்களுக்குக் காட்டு யானைகள் மற்றும் குரங்குகள் போன்ற விலங்குகளினால் தொடர்ச்சியாக சேதங்கள் விளைவிக்கப்படுகின்றன என்பதையும்;

(ii) வனசீவராசிகள் திணைக்களத்தினால் இது தொடர்பாக நிரந்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படாத காரணத்தினால் மேற்படி விவசாயிகள் விவசாய நடவடிக்கைகளிலிருந்து விலகிச் செல்லும் நிலைமை தோன்றியுள்ளது என்பதையும்;

(iii) இது தொடர்பில் 2020.10.20 ஆம் திகதி என்னால் அமைச்சருக்கு அனுப்பப்பட்டுள்ள எழுத்து மூலக் கோரிக்கை சம்பந்தமாக இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) வெங்கலச் செட்டிக்குளம் பிரதேசத்திலுள்ள 17 கிராமங்கள் உள்ளடங்கும் வகையில் யானை வேலி அமைப்பதற்காக பிரதேச செயலகத்தினால் கோரப்பட்டிருந்த ரூபா 368.2 மில்லியனை வழங்காதிருப்பதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்கூறப்பட்ட பயிர்ச்செய்கை நிலங்களை காட்டு யானைகள் மற்றும் குரங்குகள் போன்ற விலங்குகளிடமிருந்து பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1767/2023

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நெல் உட்பட ஏனைய பயிர்களின் அறுவடைகளைப் பெற்றுக்கொள்வதற்காக இயந்திர சாதனங்களைப் பயன்படுத்துவது தற்போது அதிகரித்துள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அறுவடைகளைப் பெற்றுக்கொள்வதற்காக பயன்படுத்தப்படும் இயந்திர சாதனங்கள் தொடர்பில் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(iii) இன்றேல், எதிர்காலத்தில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) விவசாய இயந்திர சாதனங்களுக்கென அறவிடப்படுகின்ற கட்டணங்கள் அதிகரித்துள்ள காரணத்தினால் விவசாயிகள் பெரும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஒரு ஏக்கர் காணிக்கு/நெல் புசல் ஒன்றுக்கு தேவைப்படும் இயந்திர சாதனங் களுக்கு அறவிடக்கூடிய உயர்ந்தபட்ச கட்டணத்தை நிர்ணயிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், உயர்ந்தபட்ச கட்டணத்தை நிர்ணயிக்கும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1817/2023

கௌரவ அஜித் மான்னப்பெரும,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கையில் வாகன விபத்துக்களினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக தனித்தனியே எத்தனை என்பதையும்;

(ii) தற்போது இலங்கையில் வாகன விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பின், அதற்கு ஏதுவாக அமைந்துள்ள காரணிகள் யாவை என்பதையும்;

(iii) வாகன விபத்துக்களைக் குறைப்பதற்கு இதுவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2538/2023

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில் உள்ள அரச நெற்களஞ்சியசாலைகளின் எண்ணிக்கை யாது;

(ii) அவை அமைக்கப்பட்டுள்ள இடங்கள் யாவை;

(iii) மேற்படி ஒவ்வொரு களஞ்சியசாலையிலும் களஞ்சியப்படுத்தக்கூடிய நெல்லின் அளவு வெவ்வேறாக யாது;

(iv) 2015ஆம் ஆண்டு முதல் இதுவரை மேற்படி களஞ்சியசாலைகளில் களஞ்சியப்படுத்தப்பட்ட நெல்லின் அளவு ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்படும் நெற்களஞ்சியசாலைகளுக்கு மத்தியில் தற்போது பயன்படுத்தப்படாதுள்ள களஞ்சியசாலைகள் உள்ளனவா;

(ii) ஆமெனில், மேற்படி நெற்களஞ்சியசாலைகளின் எண்ணிக்கை யாது;

(iii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவை;

(iv) பயன்படுத்தப்படாதுள்ள நெற்களஞ்சியசாலைகளை மீண்டும் பயன்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(v) திருகோணமலை மாவட்டத்தில் உள்ள நெற்களஞ்சியசாலைகளிலிருந்து உச்சப் பயனை பெறுவதற்காக நடைமுறைப்படுத்தப்படவுள்ள வேலைத்திட்டங்கள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3240/2023

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) சமுர்த்தி பெறுனர்களுக்கும் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கும் விநியோகிப்பதற்காக 2022 ஆம் ஆண்டு பெரும்போகத்தில் மொனராகலை மாவட்டத்தில், அரசாங்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக மொனராகலை மாவட்டத்திற்கு வழங்கப்பட்ட நிதித் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி நிதியிலிருந்து நெல் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கொள்வனவு செய்யப்பட்ட மேற்படி நெல்லை அரிசியாக மாற்றும்போது அரிசி ஆலை உரிமையாளர்களால் அப்பணியை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு முடிந்துள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி அரிசியை பயனாளிகளுக்கு விநியோகிக்கும்போது சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களினால் குறித்த பணி சரியாக நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2024 பெப்ரவரி 08, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2583/2023

கௌரவ டீ. வீரசிங்க,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை அம்பாந்தோட்டை உப்பளத்தில் உற்பத்தி செய்யப்பட்ட உப்பின் அளவு மற்றும் அதன்மூலம் ஈட்டப்பெற்ற வருமானம் ஒவ்வோராண்டு வாரியாக தனித் தனியாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியில் பசளை உப்பு உற்பத்தியினால் ஈட்டப்பெற்ற வருமானம் ஒவ்வோராண்டு வாரியாக தனித் தனியாக எவ்வளவு என்பதையும்;

(iii) எதிர்காலத்தில் பசளை உப்பினை உற்பத்தி செய்வதன் பொருட்டு அதிக கவனம் செலுத்தப்படுமா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அதற்கென எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2623/2023

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே,— முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் கொழும்பு துறைமுக நகர செயற்திட்டத்தில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2852/2023

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஆம் ஆண்டிலிருந்து இதுவரையில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ள சுற்றிவளைப்புகளின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றில் தற்போது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள எண்ணிக்கை யாது;

(iii) மேற்கூறப்பட்ட சுற்றிவளைப்புகளில் சுமூகமாகத் தீர்க்கப்பட்டுள்ள எண்ணிக்கை யாது;

(iv) பாவனையாளர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக அதிகாரசபையின் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றனவா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) ஒரே விதமான பொருள் பல்வேறு விலைகளின் கீழ் விற்பனை செய்யப்படுவது தொடர்பாக எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2977/2023

கௌரவ ஹேஷா விதானகே,— நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை முழுவதிலும் பெரும் எண்ணிக்கையிலான சமாதான நீதவான்கள் உள்ளதோடு அவர்கள் மக்களுக்கு அளப்பரிய சேவையாற்றிவருகின்றனர் என்பதையும்;

(ii) சில சமாதான நீதவான்களுக்கு தமது பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கு போதிய பயிற்சியில்லை என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) ஒரு குறிப்பிட்ட ஆளுகைப் பிரதேசத்திற்கும் முழுத் தீவுக்குமாக நியமிக்கப்பட்டுள்ள சமாதான நீதவான்களின் எண்ணிக்கை தனித்தனியே எத்தனை என்பதையும்;

(ii) ஆண்டொன்றுக்கு நியமிக்கப்படும் புதிய சமாதான நீதவான்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) சமாதான நீதவான் பதவிக்காக விண்ணப்பதாரிகள் கட்டாயம் பூர்த்தி செய்ய வேண்டிய அடிப்படை தகைமைகள் யாவையென்பதையும்;

(iv) சமாதான நீதவான்களை நியமிக்கும் போது, பதவிக்குரிய சேவை தொடர்பில் அவர்களுக்கு முறையான பயிற்சி வழங்கப்படுகின்றதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3082/2023

கௌரவ அஸோக் அபேசிங்ஹ,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை போக்குவரத்துச் சபையில் ஊழியர் சம்பள முரண்பாடு நிலவுவதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி முரண்பாடு தொடர்பில் தேசிய சம்பளங்கள் ஆணைக்குழு மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவுடன் கலந்துரையாடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதன்போது மேற்கொண்ட தீர்மானங்கள் தொடர்பாக இலங்கை போக்குவரத்துச் சபையின் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3097/2023

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட சனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் சிரேஸ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு.நிலந்த ஜயவர்தன தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ள அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் யாவை என்பதையும்;

(ii) அவர் பொலிஸ் நிர்வாகப் பிரிவின் தலைமைப் பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி, மேற்படி பதவிக்கு அவர் பரிந்துரை செய்யப்பட்ட திகதி மற்றும் குறித்த பதவிக்கு அவரைப் பரிந்துரை செய்த நபர்கள் மற்றும் நிறுவனங்களின் பெயர்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ள மேற்படி உத்தியோகத்தரை குறித்த பதவிக்கு நியமிப்பதற்கு ஏதுவாக அமைந்த விடயங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி நியமனம் தொடர்பில் மீண்டும் ஆராய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3112/2023

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாணம், நெடுந்தீவின் பிரதான போக்குவரத்து வழி கடல் வழி என்பதையும்;

(ii) மேற்படி தீவுப்பகுதியில் அமைந்துள்ள துறைமுகமானது இலங்கை கடற் படையினரின் தேவைக்காக பயன்படுத்தப்படுகின்றதென்பதையும்;

(iii) இக் காரணத்தினால் மீனவர்களின் படகுகளை நிறுத்தி வைக்க முடியாத நிலையில் அவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றார்கள் என்பதையும்;

(iv) மேற்படி தீவுப்பகுதியில் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப் பட்டுள்ள "குமுதினி" எனும் படகு மிக மோசமாக சேதமடைந்துள்ளதென்பதையும்;

(v) "வட தாரகை" படகு புனரமைப்புப் பணிகளுக்காக எடுத்துச் செல்லப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) நெடுந்தீவில் காணப்படுகின்ற நெடுஞ்சாலைகள் அமைச்சுக்குச் சொந்தமான வீதிகளின் நீளம் எவ்வளவென்பதையும்;

(ii) நெடுந்தீவு துறைமுகத்தில் நிறுத்தி வைக்கக்கூடிய படகுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) நெடுந்தீவில் போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும் படகுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) நெடுந்தீவுக்கான கடல் வழி போக்குவரத்து நடவடிக்கைகளை முறைமைபடுத்துவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) நெடுந்தீவுக்கென முறையான போக்குவரத்து கட்டமைப்பொன்று உருவாக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3155/2023

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தற்போது இலங்கை பொலிஸில், பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஆகிய ஒவ்வொரு பதவியிலும் சேவையாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாது என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு பதவியிலும் தற்போது காணப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை தனித்தனியே யாது என்பதையும்;

(iii) மேற்படி பதவிகளில் சேவையாற்றும் அலுவலர்களுக்கு பதவி உயர்வு வழங்கும் போது பின்பற்றப்படுகின்ற முறையியல் யாது என்பதையும்;

(iv) பொலிஸ் சார்ஜன்ட் பதவியிலிருந்து பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு பதவி உயர்வு பெற எடுக்கும் காலம் எவ்வளவு என்பதையும்;

(v) இலங்கை பொலிசுக்கு பொலிஸ் கான்ஸ்டபிள்களை ஆட்சேர்ப்புச் செய்யும் போது, தற்போது பின்பற்றப்படுகின்ற முறையியல் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3179/2023

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எரிபொருள் விநியோகிப்பதற்காக இலங்கையில் நிறுவப்பட்டுள்ள எரிபொருள் விநியோக நிலையங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிலையத்தினதும் களஞ்சிய கொள்திறன் தனித்தனியே யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நிலையத்தினதும் களஞ்சிய கொள்திறன் இறுதியாக அதிகரிக்கப்பட்ட திகதி தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையின் இன்றைய எரிபொருளுக்கான கேள்வியுடன் ஒப்பிடுகையில் மேற்படி நிலையங்களின் களஞ்சிய கொள்திறன் கீழ் மட்டத்தில் இருப்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அவற்றின் கொள்திறனை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) அது தொடர்பில் இன்றளவில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) பவுசர்கள் மூலம் எரிபொருளை கொண்டு செல்வதுடன் ஒப்பிடுகையில் புகையிரத தாங்கிகள் மூலம் கொண்டு செல்வது இலாபகரமான மற்றும் சிக்கல்கள் குறைந்த ஒரு முறையாகும் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(v) ஆமெனில், எரிபொருளை கொண்டு செல்வதற்காக அதிகளவில் புகையிரதங்களைப் பயன்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3412/2023

கௌரவ நிரோஷன் பெரேரா,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2022 ஆம் ஆண்டில் வாகன விபத்துகளுக்குள்ளாகியுள்ள இலங்கை போக்குவரத்துச் சபைக்கான பஸ் வண்டிகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி விபத்துகள் காரணமாக உயிரிழந்துள்ள மற்றும் காயமடைந்துள்ள பிரயாணிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) மேற்படி விபத்துகள் தொடர்பில் அமைச்சு விசாரணைகளை மேற்கொண்டுள்ளதா;

(iv) ஆமெனில், மேற்படி விசாரணைகளின் முடிவுகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2022 ஆம் ஆண்டில் வாகன விபத்துகளுக்குள்ளாகியுள்ள தனியார் பஸ் வண்டிகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி விபத்துகள் காரணமாக உயிரிழந்துள்ள மற்றும் காயமடைந்துள்ள பிரயாணிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) விபத்துகளைக் குறைப்பதற்காக அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2024 பெப்ரவரி 09, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

3368/2023

கௌரவ மயந்த திசாநாயக்க,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புச் செய்கின்ற பகுதியளவு அரச மற்றும் தனியார்துறை ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(ii) இன்றளவில் மேற்படி நிதியத்திலுள்ள நிதித் தொகை எவ்வளவு;

(iii) மேற்படி நிதி வேறு திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றதா;

(iv) ஆமெனில், அத்திட்டங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3401/2023

கௌரவ ஜயந்த சமரவீர,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களத்திற்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்ட அலுவலர்களை பதவியில் நிரந்தரமாக்குவதற்கான நிபந்தனைகள், ஏற்புடைய அமைச்சரவை அங்கீகாரத்திற்கு அமைவாக யாவை என்பதையும்;

(ii) அந்நிபந்தனைகளுக்கு அமைவாக பதவியில் நிரந்தரமாக்க முடியாத அலுவலர்கள் உள்ளனரா என்பதையும்;

(iii) ஆமெனில், அவ்வலுவலர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அவ்வொவ்வொரு அலுவலரினதும் சேவைக் காலம் மற்றும் பதவியில் நிரந்தரமாக்க முடியாமைக்கான காரணங்கள் என்பன வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட திணைக்களத்திற்கு ஆட்சேர்க்கப்பட்ட, தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர்களை பதவியில் நிரந்தரமாக்காததன் காரணமாக அவ்வலுவலர்களுக்குப் பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வலுவலர்களைப் பதவியில் நிரந்தரமாக்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3426/2023

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சில மருத்துவப் பரிசோதனைகள் அரசாங்க வைத்தியசாலைகளில் மேற்கொள்ளப்படாமையால் நோயாளர்களுக்கு அவற்றை தனியார் வைத்தியசாலைகளில்/தனியார் மருத்துவப் பரிசோதனை நிலையங்களில் மேற்கொள்ளவேண்டியுள்ளன என்பதையும்;

(ii) ஒரே வகையிலான மருத்துவப் பரிசோதனைகளுக்கு தனியார் வைத்தியசாலைகளில்/தனியார் மருத்துவப் பரிசோதனை நிலையங்களில் பல்வேறு கட்டணங்கள் அறவிடப்படுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஒரே வகையிலான மருத்துவப் பரிசோதனைகளுக்கு பல்வேறு கட்டணங்கள் அறவிடப்படுகின்றமை தொடர்பில் ஒழுங்குபடுத்தலொன்றை மேற்கொண்டு தனியார் வைத்தியசாலைகளில்/தனியார் மருத்துவப் பரிசோதனை நிலையங்களில் மேற்கொள்ளப்படும் மருத்துவப் பரிசோதனைகளுக்கு ஆகக் குறைந்த கட்டணமொன்றை விதிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3486/2023

கௌரவ வேலு குமார்,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யுனெஸ்கோ அமைப்பினால் கண்டி நகரம் உலக மரபுரிமை நகரமாக அறிவிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) இலங்கைக்கு வரலாற்று ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பல இடங்கள் மேற்படி நகரில் அமைந்துள்ளதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(ஆ) (i) கண்டி நகரில் அமைந்துள்ள உலக மரபுரிமைகளாக அடையாளங் காணப்பட்டுள்ள புனித இடங்களும் கட்டடங்களும் யாவை என்பதையும்;

(ii) அவற்றைப் பாதுகாப்பதற்கு யுனெஸ்கோ அமைப்பு நிதி உதவி அளிக்கின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், அளிக்கப்படுகின்ற வருடாந்த நிதி உதவி எவ்வளவென்பதையும்;

(iv) கண்டி நகரில் அமைந்துள்ள உலக மரபுரிமைகளாக அடையாளங் காணப்பட்டுள்ள தனியார் கட்டடங்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி கட்டடங்களின் உரிமையாளர்களுக்கும் யாதேனும் நிதி உதவி வழங்கப்படுமா என்பதையும்;

(vi) ஆமெனில், மேற்படி நிதி உதவி எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி (ஆ) (i) இல் குறிப்பிடப்பட்ட இடங்கள் உள்ளபடியே பேணப்படுமா என்பதையும்;

(ii) அவற்றில் மாற்றங்கள் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) கண்டி நகரை உலக மரபுரிமை நகரமாக பேணிச் செல்வதற்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3560/202

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2023.07.01 ஆம் திகதி பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் வருகை தந்த செவனகல சீனித் தொழிற்சாலை நிருவாகத்தினர் ஒங்டும வீடமைப்புத் தொகுதியில் அமைந்துள்ள வீடுகளின் நீர் மற்றும் மின்சாரத்தை துண்டித்துள்ளார்கள் என்பதையும்;

(ii) ஓய்வுறுத்தப்படும் சந்தர்ப்பத்தில் தங்கிவாழ்பவர்களை ஆட்சேர்ப்பதற்கு அல்லது குடியிருப்பதற்காக காணியொன்றை வழங்குவதற்கு, 1983-1986 காலப்பகுதியில் குறிப்பிட்ட வீடமைப்புத் தொகுதியின் வீடுகளில் ஊழியர்களை குடியமர்த்தும்போது நிருவாகத்தினர் வாக்குறுதியளித்துள்ளார்கள் என்பதையும்;

(iii) 30-40 வருடங்களாக குறிப்பிட்ட வீடுகளில் குடியமர்ந்திருந்தவாறு நிறுவனத்தின் மேம்பாட்டின் பொருட்டு இந்த ஊழியர்கள் செயற்பட்டுள்ளார்கள் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) குடியிருக்கும் ஊழிர்களை நியாயமற்ற விதத்தில் நடாத்தியவாறு நிறுவனத்தின் காணித் துண்டுகளை குடியிருப்பதற்காக வெளியாட்களுக்கு வழங்குகின்றனர் என்பதை அறிவாரா;

(ii) மேற்படி வீடுகளில் குடியுள்ள ஊழியர்களுக்கு தொடர்ந்தும் குறிப்பிட்ட வீடுகளில் தங்கியிருப்பதற்கு அனுமதி வழங்கப்படுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3646/2023

கௌரவ வடிவேல் சுரேஷ்,— அமைச்சரவை அங்கத்தவர் அல்லாத அரச பெருந்தோட்ட தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை, அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் மற்றும் அரச தொழில்முயற்சியாண்மையின் கீழ் காணப்பட்ட தோட்டங்களின் முகாமைத்துவம், குத்தகை அடிப்படையில் தனியார் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்கம்பனிகள் யாவை என்பதையும்;

(iii) அவ்வாறு வழங்கப்பட்ட தோட்டங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற் குறிப்பிட்ட கம்பனிகளின் குத்தகைக் காலம் யாதென்பதையும்;

(ii) மேற்படி குத்தகைக் காலத்தை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) மேற்படி கம்பனிகள் மேற்குறிப்பிட்ட தோட்டங்களை கீழ்க் குத்தகைக்கு வழங்கியுள்ளதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அக்கம்பனிகள்/நிறுவனங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கீழ்க் குத்தகைக்கு வழங்கும்போது தொழிலாளர் உரிமைகள் பாதுகாக்கப்படும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) தொழில் சட்டங்களையும் தொழிலாளர் உரிமைகளையும் மீறும் விதமாக சட்டரீதியற்ற வகையில் மேற்கொள்ளப்படுகின்ற கீழ்க்குத்தகை அளிப்புகளைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3663/2023

கௌரவ லலித் எல்லாவல,— விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) சூரியவெவ, மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்காக வெளிநாட்டு நன்கொடைகள் கிடைக்கப்பெற்றனவா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு வெளிநாட்டு நன்கொடையின் பெறுமதி தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்காக கேள்வி மனுக்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(ii) இல்லையெனில், குறித்த கட்டுமான நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்ட முறையியல் யாதென்பதையும்;

(iii) நிர்மாணப் பணிகள் வெளிநாட்டு நிறுவனமொன்றினால் மேற்கொள்ளப் பட்டிருப்பின், அதன் இலங்கை முகவர் யார் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்டுள்ள அரசாங்க நிதியின் அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி நிதி பெறப்பட்ட நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி விளையாட்டு மைதானம் திறக்கப்பட்ட திகதி தொடக்கம் இது வரையில் அதன் வருமானம் மற்றும் செலவினம் ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3673/2023

கௌரவ ஹர்ஷண ராஜகருணா,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சுகாதார அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் டெங்கு ஒழிப்புத் திட்டத்தில் பணியாற்றிய அமைய, பதிலீட்டு, ஒப்பந்த மற்றும் தற்காலிக ஊழியர்கள் 2019 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நீக்கப்பட்டுள்ளனரா என்பதையும்;

(ii) அவ்வாறு நீக்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு ஊழியரினதும் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) இவர்களை நீக்கியமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நீக்கப்பட்ட மேற்படி ஊழியர்கள் மீண்டும் சேவைக்கு அழைக்கப்படுவார்களா என்பதையும்;

(ii) ஆமெனில், அத் திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி ஊழியர்கள் தொடர்பாக இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3708/2023

கௌரவ டலஸ் அழகப்பெரும,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு முதல் இதுவரை இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்குக் கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை ஒவ்வொரு வருட அடிப்படையில்;

(ii) அவற்றில் அரசியல்வாதிகளுக்கும் அரச அலுவலர்களுக்கும் எதிராக உள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை;

(iii) மேலே (i)இல் குறிப்பிடப்பட்டுள்ள முறைப்பாடுகளில் நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட எண்ணிக்கை ஒவ்வொரு வருட அடிப்படையில்;

(iv) ஆரம்பப் புலனாய்வின் பின்னர் அல்லது நீதிமன்ற விசாரணையின் போது ஆணைக்குழுவினால் வாபஸ் பெறப்பட்ட முறைப்பாடுகள் /வழக்குகளின் எண்ணிக்கை;

(v) மேற்படி ஒவ்வொரு முறைப்பாடு /வழக்கின் பிரதிவாதிகளின் பெயர்கள்;

தனித்தனியே யாது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2010 ஆம் ஆண்டு முதல் இதுவரை நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட முறைப்பாடுகளில் நீதிமன்றத்தினால் தண்டனை விதிக்கப்பட்டுள்ள மற்றும் நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள்/வழக்குகளின் எண்ணிக்கை ஒவ்வொரு வருட அடிப்படையில்;

(ii) நிராகரிக்கப்பட்ட ஒவ்வொரு முறைப்பாடு/வழக்கின் பிரதிவாதிகளின் பெயர்கள்;

(iii) குற்றவாளியாக்கப்பட்ட ஆட்களிடமிருந்து அறவிட்டுக்கொள்ளப்பட்ட தண்டப்பணம் ஒவ்வொரு வருட அடிப்படையில்;

தனித்தனியே யாது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3758/2023

கௌரவ விமலவீர திசாநாயக்க,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையில் ஓய்வுபெற்ற பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் செலுத்துவதற்காக செலவு செய்யப்பட்ட தொகை;

(ii) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட தீர்வைச் சலுகையுடனான வாகன அனுமதிப் பத்திரங்களுக்குரிய தீர்வைச் சலுகையின் நிதி ரீதியான பெறுமதி;

ஒவ்வொரு வருட அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

பா. 83/2024

கௌரவ புத்திக பத்திறண

கௌரவ சட்டத்தரணி லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ அலி சப்ரி ரஹீம்

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்

கௌரவ வடிவேல் சுரேஷ்

கௌரவ லசந்த அலகியவன்ன

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— மாத்தறை மாவட்டத்தில் நில்வளா கங்கையை உள்ளிட்ட நீர் மூலங்களின் காரணமாக எழுந்துள்ள பிரச்சினைகளை ஆழமாக ஆராய்ந்து புதிய புனர்நிர்மாண முன்மொழிவுத்திட்டமொன்றைத் தயாரிப்பதற்குப் பொருத்தமான விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்ற விசேட குழு,— மாத்தறை மாவட்டத்தின் கொங்கல மற்றும் இரக்வானை மலைத்தொடரைச் சார்ந்ததாக ஊற்றெடுக்கும் நில்வளா கங்கை மற்றும் கிங் கங்கை ஆகியன முறையே மாத்தறை மற்றும் காலி மாவட்டங்களூடாகப் பாய்ந்து கடலுடன் சங்கமிக்கின்ற அதேவேளை பொல்வத்த கங்கையும் இதற்கிணையான முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நீர் மூலம் என்பதாலும்;

இக் கங்கைகளின் நீர் முகாமைத்துவம் மற்றும் வெள்ள முகாமைத்துவம் தொடர்பில் முதன் முதலில் ஒல்லாந்தர் ஆட்சியின்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் சுதந்திர இலங்கையில் கிங் மற்றும் நில்வளா ஆகிய கங்கைகளின் நீரை தென்கிழக்கிலங்கை எனப்படும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தைப் போஷிப்பதற்காக பயன்படுத்துவது பற்றிய ஆரம்பப் பிரேரணையை அப்போது அக்குரெஸ்ஸ தொகுதி பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த டாக்டர் எஸ்.ஏ. விக்கிரமசிங்ஹ அவர்கள் 1950களில் சமர்ப்பித்திருப்பதாலும்;

கிங் மற்றும் நில்வளா ஆகிய கங்கைகளின் நீரை முகாமை செய்தவாறு வருடாந்தம் ஏற்படுகின்ற வெள்ள நிலைமையை முகாமைத்துவம் செய்து அந்த நீரை இரு மாவட்டங்களிலுமுள்ள மக்களது தேவைகளுக்கும், விவசாயம் மற்றும் கைத்தொழிற்சாலை செயற்பாடுகளுக்கும், உயிரினப் பல்வகைமை மற்றும் சுற்றுச் சூழல் சமநிலையை பேணிச் செல்வதற்கும் முறையாகப் பயன்படுத்துவது தொடர்பில் பல்வேறு துறைசார் நிபுணர்களினால் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாலும்;

1977 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நில்வளா கங்கையை அண்டியதாக வெள்ளப்பெருக்கைத் தடுப்பதற்கான கருத்திட்டமொன்று செயற்படுத்தப்பட்ட போதிலும், 1987 – 1989 காலப்பகுதியில் நாட்டில் காணப்பட்ட அசாதாரண நிலைமை காரணமாக அத் திட்டம் இடைநடுவே நிறுத்தப்பட்டதால் நில்வளா கங்கையை அண்டியதான விளைநிலங்கள் தரிசு நிலங்களாக மாறியதோடு, வெள்ளப்பெருக்கு அச்சுறுத்தல் தொடர்ந்தும் காணப்படுவதால் வறட்சிக் காலத்தில் உவர் நீர் நில்வளா கங்கையின் ஊடாக மேல் நோக்கிப் பாய்ந்தோடி குடி நீரிலும் விளைநிலங்களிலும் கலந்தமையினால் பாரதூரமான பிரச்சினைகள் ஏற்பட்டன. அத்துடன் இதன் பொருட்டு செயற்படுத்தப்பட்ட நில்வளா உவர் நீர் தடுப்பணை காரணமாக இன்றளவில் வெள்ள நீர் தொடர்ந்தும் விளைநிலங்களில் தேங்குவதால் நெல், கறுவா, மரக்கறி, தெங்கு மற்றும் இதர பயிர்ச் செய்கை நடவடிக்கைகளும் பாற் பண்ணையாளர்களும் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்ற மோசமானதொரு நிலைமை ஏற்பட்டுள்ளதாலும்,

கிங் கங்கையை அண்டியதான உவர் நீர் தடுப்பணை வெற்றியளித்ததோடு, நில்வளா கங்கையை அண்டியதான உவர் நீர் தடுப்பணை பலனளிக்காமை தொடர்பாக ஆழமாக பகுப்பாய்வு செய்ய வேண்டிய நிலைமை தோன்றியுள்ளதாலும்,

(அ) சுதந்திர இலங்கையின் சுமார் 7 1/2 தசாப்த காலப்பகுதியில் கிங் கங்கை மற்றும் நில்வளா கங்கை தொடர்பாக அறிஞர்களும் துறைசார் நிபுணர்களும் மேற்கொண்ட ஆய்வுகள் குறித்து ஆழமாக பகுப்பாய்வு செய்து அவர்களது முன்மொழிவுகளிலுள்ள காத்திரமான இயல்புகளை இனங்காண்பதற்கும்;

(ஆ) நில்வளா மற்றும் கிங் ஆகிய கங்கைகளின் மேல் படுகையின் மேலதிக நீரை தென்கிழக்கிலங்கைக்குக் கொண்டு செல்வது தொடர்பில் விஞ்ஞானபூர்வமானதும் மக்கள் வாழ்வுக்கு குறைந்தபட்ச பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலானதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முறையியல்கள் தொடர்பாக நடைமுறைச் சாத்தியமான வேலைத்திட்டமொன்றை உருவாக்குவது பற்றிய முன்மொழிவுகளைப் பெற்றுக்கொள்வதற்கும்;

(இ) மேற்படி (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டத்தை இதற்கு முன்னர் செயற்படுத்தியமையுடன் தொடர்புடையதாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்/ செலவிடப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதிகளின் உற்பத்தித்திறன் தொடர்பாக ஆழமான விசாரணையினை மேற்கொள்வதற்கும்;

(ஈ) நில்வளா உவர் நீர் தடுப்பணை காரணமாக ஏற்பட்டுள்ள அனைத்து விதமான பாதிப்புகளையும் நீக்குவதற்கு மேற்கொள்ளக்கூடிய துரித குறுகிய கால, மத்திய கால மற்றும் நீண்ட கால திட்டங்களைத் தயாரித்து செயற்படுத்துவதற்கான விதப்புரைகளை வழங்குவதற்கும்;

(உ) மாவட்டத்திலுள்ள நீர்ப் பாவனையாளர்களையும் எதிர்காலத்தில் விரிவுபடுத்தக்கூடிய நீர் கருத்திட்டங்களுக்காக திகிலி ஓயாவை உள்ளிட்ட பிரதேசங்களில் பொருத்தமான புதிய நீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைப்பதையும் அடையாளங் காண்பதற்கும், தற்போது செயற்பாட்டிலுள்ள நீர்ப் பம்பி நிலையங்கள் தொடர்பில் விஞ்ஞான அடிப்படையிலான பகுப்பாய்வினை மேற்கொண்டு புதிய மூலோபாயங்களை முன்மொழிவதற்கும்;

(ஊ) நில்வளா கங்கையை அண்டியதாக இடம்பெற்றுவரும் முதலை – மனித மோதல் தொடர்பில் நிலைபேறான தீர்வினை வழங்குவதற்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்கும்;

(எ) தென் மாகாணத்தில் கைத்தொழில், கமத்தொழில், நீர் மின்னுற்பத்தி, கால்நடை வளர்ப்பு மற்றும் ஏனைய மனித செயற்பாடுகள் மற்றும் உயிரினப் பல்வகைமையைப் பாதுகாத்தவாறு நில்வளா மற்றும் கிங் கங்கைகளின் நீர் கடலுடன் சங்கமிக்க முன் உச்சப் பயனுடன் அதனைப் பயன்படுத்துவது தொடர்பில் முன்மொழிவுகளைப் பெற்றுக்கொள்வதற்கும்;

(ஏ) வெள்ளத் தடுப்பு அபிவிருத்திக் கருத்திட்டமொன்றிற்கு அப்பால் சென்று கிங் – நில்வளா துரித பல்நோக்குத் திட்டத்தினூடாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்கும் குறித்த நீர் மூலங்களை போக்குவரத்து, நன்னீர் மீன்பிடிக் கைத்தொழில், சுற்றுலாத்துறை மற்றும் கலாசார விழிப்புணர்வுக்காக பயன்படுத்துவதற்கான புதிய ஆக்கபூர்வமான அணுகுமுறைகளை அடையாளங் காண்பது தொடர்பான விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்கும்;

(ஐ) கிங், நில்வளா மற்றும் பொல்வத்த கங்கைகளைச் சார்ந்ததாக அக்கங்கைகளுடன் இணையும் கிளை ஆறுகள் / ஓடைகள் மற்றும் அவ்வாறான நீர்நிலைகளை அண்டியதாகவும், ஆற்றுப்படுகைகளிலும் பள்ளத்தாக்குகளிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்திச் செயற்பாடுகளை இனங்காணல், அக்கங்கைகளின் இருபுறமும் ஒதுக்குக் காடுகளை உருவாக்கல், கழிவுகள் ஒன்றுசேர்வதை தடுத்தல், மனித செயற்பாடுகள் மூலம் கங்கைகளின் நீரை மாசுறச் செய்யும் வழிமுறைகளை மறுதலித்தல், அனுமதியற்ற கட்டட நிர்மாணங்கள் மூலம் நீராதாரங்களுக்கு தடையேற்படுதல் மற்றும் சில மின்னுற்பத்தி நிலையங்களினால் கங்கைகளுக்கும், உயிரினப் பல்வகைமைக்கும் ஏற்படும் பாதிப்புகளை இனங்கண்டு அந்த நிலைமைகளை மறுதலிப்பதற்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்கும்;

(ஒ) மேற்குறிப்பிட்ட கங்கைகளுடன் தொடர்புடையதாக இடைநடுவே நிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முழுமை பெறாத பணிகளை இனங்கண்டு, அப்பணிகளை மேற்கொள்வதற்குரிய முன்மொழிவுகளைத் தயாரித்தல், இக்கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது மேற்கொள்ளப்பட்ட செலவுகள் தொடர்பாக தடயவியல் கணக்காய்வு உட்பட பொருத்தமான நடவடிக்கைகளை தேவையான சந்தர்ப்பங்களில் முன்மொழிவதற்கும்; மற்றும்

(ஓ) மேலே (ஐ)இல் குறிப்பிடப்பட்டுள்ள கங்கைகளுடன் தொடர்புடைய வேறு ஏதேனும் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகள், இடைநடுவே நிறுத்தப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் வெற்றியளிக்காத நடவடிக்கைகள் தொடர்பாக ஆழமாக ஆராய்ந்து, குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலத்தில் நடைமுறைப்படுத்துவதற்குப் பொருத்தமான விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்ற விசேட குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றுகின்றது.

2. (அ) குழுவின் தவிசாளரும் அதன் உறுப்பினர்களும் சபாநாயகரினால் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்; மற்றும்

(ஆ) பாராளுமன்ற நிலையியற் கட்டளை 101 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், குழுவானது இருபது (20) உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. குழுவானது —

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) மேற்படி விடயங்கள் தொடர்பில் விரிவான ஆய்வினை மேற்கொள்வதற்காக குழு அவசியமென தீர்மானிக்கும் வகையில், குழுவின் முன் தோன்றுமாறு எவரேனும் ஆளை அழைப்பதற்கும், ஏதேனும் ஆவணத்தை அல்லது பதிவை சமர்ப்பிக்குமாறு பணிப்பு விடுப்பதற்கும், அத்தகைய அனைத்து சாட்சிகளையும் எழுத்து மூலமாகவோ, வாய்மூலமாகவோ பெற்றுக்கொள்வதற்கும்;

(இ) குழுவுக்கு உதவி வழங்குவதற்காக தொடர்புடைய துறைகளில் சிறப்பறிஞர்கள் மற்றும் நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும்; மற்றும்

(ஈ) பாராளுமன்றத்தின் ஏதும் ஒத்திவைப்பினால் அல்லது பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைப்பினால் தடைபெறாது காலத்துக்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கும், கூடுவதற்கும்;

தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழுவானது அதனது முதல் கூட்டத்திலிருந்து மூன்று (03) மாத காலத்தினுள் அல்லது பாராளுமன்றத்தால் வழங்கப்படும் அத்தகைய மேலதிக ஒரு காலப்பகுதிக்குள் பாராளுமன்றத்திற்கு அதன் அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.